## ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவனம் - 2022

-----------------------------------------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆவது பிரின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2005 இன் 04 ஆம் இலக்க ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் விதப்புரையின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் தேவைப்படுகின்ற அல்லது அங்கீகாரம் வழங்கப்படுகின்ற விடயங்கள் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்ய முடியாதிருந்த போதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,478,285 ஆன வங்கி மேலதிக பற்று, காசு மீதியில் ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்களில் காசு | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெறுமதி வங்கி மேலதிக பற்றாக இல்லாதிருந்ததுடன், கணக்கில் இரு தடவை உள்ளடக்கப்பட்ட (swift facility) இன் காரணமாக இந்த மறை பெறுமதி ஏனைய கணக்கில் மாற்றப்பட்டமையால் ஏற்பட்டதாகும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வங்கி மீதி மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற திகதியில் உள்ள காசு மீதியை வெளிப்படுத்தும் வகையில் அறிக்கையிடல் காலத்தில் காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு செலவின விடயங்கள் சரியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 10,233 கூட்டலில் வழு காணப்பட்டமை, தொழிற்படு மூலதன முரண்கள் 142,007 குறைத்து காண்பிக்கப்பட்டமை, முற்பணம் ரூபா 476,900 செயற்பாடு மற்றும் முதலீடு போன்ற செயற்பாடுகள் இரண்டிலும் காண்பிக்கப்பட்டமை மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 54,752 அதிகரித்து காண்பிக்கப்பட்டமை போன்ற வழுக்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | பிற்போட்ட ரீதியில் எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த ஆண்டுகளுக்குரிய பொருன்மையான தவறுகளை சரிசெய்தல் தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் மீளமைத்தல் பிற்போட்ட ரீதியில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 635,768 கூட்டுத் தொகைக்குரிய முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்கள் பிற்போட்ட ரீதியில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | பொருண்மையான தவறுகள் பிற்போட்ட ரீதியில் சீராக்கி 2021 இன் போது சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் இனங்காணப்பட வேண்டிய ரூபா 117,040 பெறுமதியான கைவிரல் அடையாள இயந்திரம் மீண்டெழும் செலவினமாக பதிவழிக்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் | கைவிரல் அடையாள இயந்திரத்தின் செயற்படு நிலைமையை சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் வெற்றியடையாமையின் காரணமாக உரிய இயந்திரத்தை மாத்திரம் | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறைத்தும் ஆண்டின் பற்றாக்குறை அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அது கைவிரல் அடையாள இயந்திரத்தின் பராமரிப்பு செயற்பாட்டில் ஒரு பகுதியாக இருந்தமையால் அந்த செயலவினங்கள் பராமரிப்பு செலவினங்களின் கீழ் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் வருமான செலவினங்களை இனங்காணல் கணக்கீட்டு கொள்கையில் வெளிப்படுத்தப்படாமல் 2022 ஆம் ஆண்டின் போது 03 பாடநெறிகளுக்காக கிடைத்த ரூபா 4,956,800 வருமானத்தில் ரூபா 2,319,450 மீளாய்வாண்டின் வருமானமாகவும், ரூபா 2,637,350 முற்பணமாக கிடைத்த வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்கு நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப்பெறுமதி ரூபா 732,793 ஆன 04 நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்களுக்கு உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | கடந்த ஆண்டின் போதும் இவ்வாறான நிலைமையொன்று அவதானிக்கப்பட்ட துடன், நட்குறிப்பு உறுதிச் சீட்டுக்களுக்கான சான்றுகள் குறித்துரைத்த பிரகாரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை திறந்த பல்கலைக்கழத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 396,019 மீதியொன்று காணப்பட்ட போதிலும், திறந்த பல்கலைக்கழத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியது ரூபா 33,002 ஆனமையால் ரூபா 363,017 இணக்கமின்மை காணப்பட்டது. | திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் அனுப்பப்படுகின்ற ஆவணங்கள் இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டள்ளது. | நிறுவனங்களுக்கு இடையே மேற்கொள்ளப்படு கின்ற கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக ஏற்படுகின்ற மீதியை இணக்கம் செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய 03 பாடநெறிகளின் வருமானம் பேரேட்டு கணக்குகளின் பிரகாரம் ரூபா 15,442,305 ஆக இருந்த போதிலும், உரிய பட்டோலைகளின் பிரகாரம் அந்த வருமானம் ரூபா 14,676,745 ஆனமையால் ரூபா 765,560 இணக்கமின்மை காணப்பட்டது. | TESL பாடநெறி கட்டணம் பேரேட்டின் மீதி சரியாக இருந்ததுடன், நாட்குறிப்புக்கள் சீராக்குவதற்குரிய பெறுமதி பட்டோலைகளில் காண்பிக்கப்பட்ட போதிலும், PPE பாடநெறி கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் எதிர்காலத்தில் பிற்போட்ட ரீதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், NEW MA TESL பாடநெறி கட்டணத்தை சீராக்கும் போது மாணவர் எண்ணிக்கை அதிகமாக இருந்தமையால் மற்றும் கணிப்பீடுகள் மிகவும் சிக்கலாக இருந்தமையால் காசாக கிடைத்த வருமானம் மற்றும் அட்டுறு பெறுமதிகள் மாத்திரம் சீராக்கப்பட்டிருந்தது. | சரியாக வருமானங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,561,799 செலுத்தப்பட்ட போதிலும், அதன் முகப் பெறுமதியான ரூபா 9,000,000 முதலீடாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் திறைசேரி உண்டியல் முதலீட்டு கணக்கு மற்றும் திறைசேரி உண்டியல் வட்டி வருமானக் கணக்கு என்பன ரூபா 438,201 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் திறைசேரி உண்டியல் முதலீட்டு கணக்கின் மீதி மற்றும் மீதி உறுதிப்படுத்தும் கடிதத்தின் மீதி சீராக்கப்பட்டள்ளது. | திறைசேரி உண்டியல்களில் முதலீடு மற்றும் வட்டி வருமானம் சரியான கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2021 ஆம் ஆண்டின் போது மேலதிகமாக கணக்கு வைக்கப்பட்ட ரூபா 142,008 ஆன திறைசேரி உண்டியல் வட்டி வருமானத்தை சரிசெய்யும் போது முன்னைய ஆண்டின் வருமானத்தில் சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் வருமானத்தில் குறைத்து காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் பிற்போட்ட ரீதியில் சீராக்கப்பட்டுள்ளது. | திறைசேரி உண்டியல்களில் முதலீடு மற்றும் வட்டி வருமானம் சரியான கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(அ) பிரிவு மற்றும் 2019 யூலை 29 ஆம் திகதிய இலக்கம் 04/2019 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை கடிதம். | நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் நிறுவனத்தால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 108,831,800 முதலீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரி உண்டியல்களில் நிறுவனத்தால் உழைக்கப்பட்ட வருமானம் முதலீடு செய்யப்பட்டிருந்தது டன், அவ்வாறு முதலீடு செய்வதற்கு 2015 யூலை 17 ஆம் திகதி நடைபெற்ற 79 ஆவது முகாமைத்துவ சபையிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | நிதிச் சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 03/2022 என்ற தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை மற்றும் 2023 சனவரி 18 ஆம் திகதிய | சுற்றறிக்கைக்கு முரணாக 2023 மார்ச் 01 ஆம் திகதி முதல் ஏழு வருட கற்கை விடுமுறை பெற்றுக் கொள்வதற்கு இருக்கின்ற விரிவுரையாளர்கள் மற்றும் அவர்களின் மனைவிமார்களுக்காக உரிய விஷேட வெளிநாட்டு பிரயாணத்திற்கு 103 நாட்களுக்கு முன்னர் அதாவது 2022 நவம்பர் 17 ஆம் திகதி | அவர்களினால் கோரப்பட்டிருந்த பிரகாரம் 2022 நவம்பர் மாதத்தின் போது உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் விமானப் பயணச் சீட்டுக்கள் | சுற்றறிக்கை ஆலோசனை மற்றும் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | BD/HRD/126/2 14/19/2023 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் கடிதம். | விமானப் பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 901,234 செலவிடப்பட்டிருந்தது. | விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், உரிய கால எல்லையில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (இ) | 1995 யூலை 14 ஆம் திகதிய இலக்கம் 636 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை. | மீளாய்வாண்டில் 04 பாடநெறிகளின் கீழ் நடாத்தப்பட்ட 45 பரீட்சைகளில் 12 பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடல் 15 நாட்கள் முதல் 95 நாட்கள் வரையான கால தாமதமாகி இருந்ததுடன், 04 பரீட்சைகளின் பெறுபேறுகள் 2023 மார்ச் 23 ஆம் திகதி வரையிலும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாடநெறிகளுக்குரிய மதிப்பீட்டு நடவடிக்கைகளில் அநேகமானவை வரவழைக்கப்படுகின்ற விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றமையால் அந்த விரிவுரையாளர்கள் மிகவும் அதிக பணிகளில் ஈடுபட்டமையால் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதில் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற (Operational Manual) பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பிரிவு | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயல் முன்னேற்றம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 சனவரி மாதத்தின் நிறுவன முகாமைத்துவ சபையின் பதவிக்காலம் முடிவடைந்தமையால் அடுத்த கூட்டத்தை நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக இந்த அறிக்கையை அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,750,951 மிகையான இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,386,768 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,635,817 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பாடநெறி கட்டண வருமானம் ரூபா 4,816,382 இனால் குறைவடைந்தமையும், அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் ரூபா 2,436,000 இனால் குறைவடைந்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவன அபிவிருத்தி நிதியத்தில் காணப்பட்ட (PGIE Development Fund) ரூபா 3,967,500 மீதி 07 வருட காலம் முதல் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதி நிறுவனத்தின் முகாமைத்துவ தகவல் முறைமைக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், அதன் ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை ஸ்தாபித்த நோக்கத்திற்காக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்படாத பதவிகளுக்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் 07 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 5,449,707 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | திறந்த பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபை அங்கீகாரம் பெற்று தற்காலிக ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 2020 இன் போது பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுயமாக நிதி உழைப்பதன் கீழ் தற்காலிக அங்கீகாரம் வழங்கியிருந்தது. | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவியணியினரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |